Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 55/2023 |
| Police station | : | தூக்கணாம்பாக்கம் |
| Deposition of witness for Prosecution | : | LW1 / PW1 |
| Name | : | லதா |
| Father Name/Husband Name | : | க/பெ. ஆறுமுகம் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 05.05.2025 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA.LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். ).

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தற்போது தூக்கணாம்பாக்கம் மாதா கோவில் தெருவில் வசித்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன ஆறுமுகம் எனது கணவர் ஆவார். கடந்த 3 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் எனக்கு தெரியவில்லை. அதை சொல்லும்அளவிற்கு எனக்கு படிப்பறிவு கிடையாது. ஒரு நாள் இரவு சுமார் 7 மணியளவில் நானும் எனது கணவரும் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக சைக்கிளில் சென்றுகொண்டிருந்தோம். அப்போது சுடு காடு அருகே எங்களுக்குநேர் எதிர் திசையில் வந்த எமகா வாகனம் அதிவேகமாக வந்து என் கணவர் சைக்கிள் மீது மோதி என் கணவர் மூச்சு, பேச்சு இல்லாமல் அ டிப்பட்டு கீழே விழுந்துவிட்டார். எமகா வாகனத்தில் வந்தவருக்கும் கீழே விழுந்து அடிப்பட்டது. ஆஜர் எதிரி தான் அந்த நபர் ஆவார். அடிப்பட்டபோது அருகில்இருந்த முத்துக்குமார் மற்றும் ஜெயக்கொடி ஆகியோர் சம்பவத்தை பார்த்து ஓடி வந்து என் கணவரை தூக்கி ஆம்புலனஸ் வரவழைத்து தூக்கணாம்பாக்கம்அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆஜர் எதிரியும் அதே ஆம்புலன்ஸ்சில் மருத்துவமனைக்கு வந்தார். தூக்கணாம்பாக்கம் அரசு மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். பிறகு அங்கிருந்து பாண்டிச்சேரி மகாத்மாகாந்தி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். என் கணவர் அங்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். நான் இது சம்பந்தமாக தூக்காணம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். என்னிடம்

காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**மேற்படி சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் கடலூர் அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்யும் போது நானும் உடன் இருந்தேன். என்னையும் விசாரணை செய்தார்கள்.

**எதிரிஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

Case Number : CC.No. 55/2023

Police station : தூக்கணாம்பாக்கம்

Deposition of witness for Prosecution : LW2 / PW2
Name : முத்துக்குமார்
Father Name/Husband Name : த/பெ. நல்லதம்பி
Village :
Cuddalore :
Taluk :
Caste :
Calling :
Religion :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 05.05.2025 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். ).

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தூக்கணாம்பாக்கம் மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கடந்த 9,..2022 ம்தேதி நான் வேலைக்கு சென்றுவிட்டு இரவு சுமார் 7 மணியளவில் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது தூக்கணாம்பாக்கம் புளிய மரத்தடியில் ஜெயக்கொடி என்பவருடன் நின்று பேசிக்கொண்டிருந்தேன். அப்போது இவ்வழக்கு சம்பவத்தில் இறந்தபோன ஆறுமுகம் மற்றும் அவரது மனைவி இருவரும் கொள்ளைக்கு சென்று கொண்டிருந்தனர். அப்போது அவர்களுக்கு எதிர் திசையில் எமாகா வாகனம் ஒன்று அதிவேகமாகவும், அஜாக்கிரையாகவும் வந்து ஆறுமுகம் என்வரின் சைக்கிளில் மோதி அடிப்பட்டு இருவரும் கீழே விழுந்தனர். நாங்கள் இருவரும் ஓடிச்சென்று தூக்கி 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆறுமுகம் மற்றும் ஆஜர் எதிரியையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். ஆஜர் எதிரி தான் மேற்படி எமாகா வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார். அதன் பிறகு ஆறுமுகம் பாண்டிச்சேரி மகாத்மாகாந்தி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.நான் நடந்த சம்பவத்தை கூறினேனன்.

**எதிரிஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 55/2023 |
| Police station | : | தூக்கணாம்பாக்கம் |
| Deposition of witness for Prosecution | : | LW3 / PW3 |
| Name | : | ஜெயக்கொடி |
| Father Name/Husband Name | : | த/பெ. ஜெயராமன் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |

Caste :
Calling :
Religion :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 05.05.2025 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.
(எதிரி ஆஜர்.).

**முதல் விசாரணை:**

நான் தூக்கணாம்பாக்கம் மாதா கோவில் தெருவில் வசித்து வருகிறேன். கடந்த 9.5.2022 ம் தேதி இரவு சுமார் 7 மணியளவில் தூக்கணாம்பாக்கம் சுடுகாடு அருகே உள்ள புளிய மரத்தடியில் நானும் முத்துக்குமாரும் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது டமார் என்று சத்தம்கேட்டது. அந்த வழியாக சென்ற ஆறுமுகம் சைக்கிளில் இருந்து எதிர் திசையில் ஆஜர் எதிரி அதிவேகமாக ஓட்டி வந்த எமாகா வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. நாங்கள் ஓடிச்சென்று ஆறுமுகத்தை தூக்கி பார்த்தபோது அவர் பேச்சு, மூச்சு இல்லாமல் இருந்தார். அதன் பிறகு 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். பாண்டிச்சேரி மகாத்மாகாந்தி மருத்துவமனையில் ஆறுமுகம் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்பந்தமாக மறு நாள் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து எங்களிடம் நடந்த விபரத்தை கேட்டு விசாரணை செய்தார்கள். நான் நடந்த விபரங்களை கூறினேன்.

**எதிரிஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

Case Number : CC.No. 55/2023
Police station : தூக்கணாம்பாக்கம்
Deposition of witness for Prosecution : LW4 / PW4
Name : விக்னேஷ்
Father Name/Husband Name : த/பெ. முருகையன்
Village :
Cuddalore :
Taluk :
Caste :
Calling :
Religion :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 05.05.2025 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.
( எதிரி ஆஜர்).

**<u>முதல் விசாரணை:</u>**

நான் துாக்கணாம்பாக்கம் மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் இறந்துபோன ஆறுமுகம் எனது சின்ன தாத்தா ஆவார். கடந்த 9.5.2022 ம்தேதி நான் வீட்டில் இருந்தபோது இரவு சுமார் 7.15 மணியளவில் முத்துக்குமார் எனக்கு போன் செய்து என் சின்னதாத்தா ஆறுமுகத்திற்கு அடிப்பட்டு கிடப்பதாக கூறினார். நான் உடனடியாக சுமார் 7.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்றேன். என் சின்ன தாத்தா ஆறுமுகம் மூச்சு , பேச்சு இல்லாமல் கிடந்தார். 108 ஆம்புலன்ஸ் மூலம் நானும் என் பாட்டி லதாவும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். கடலூர் அரசு மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக பாண்டிச்சேரி மகாத்மாகாந்தி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சுமார் 3 நாட்கள் கழித்து ஆறுமுகம் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். போலிசார் கடலூர் அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்யும்போது நான் உடன் இருந்தேன்.

**எதிரிஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**